
உ

சிவமயம்



# அமரர் முத்துலிங்கம் ஆனந்தலிங்கம்

அவர்களின்

# அஞ்சலி மலர்

அன்னையின் மடியில்:
13.09.1949

ஆண்டவன் அடியில்:
06.07.2000

05.08.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

புங்குடுதீவு கிழக்கு
மேன்மைபெறு இருமரபுந் தூய தனிநாயகமுதலி
வழித்தோன்றிய
முத்துலிங்கம், நாகரத்தினம் தம்பதிகளின்
அருந்தவப் புதல்வனும்
கெங்காதேவியின் ஆருயிர்க் கணவரும்
ஜெயசாந்தி, அர்ஜூன் ஆகியோரின்
அருமைத் தந்தையுமாகிய

# அமரர் மு. ஆனந்தலிங்கம்

அவர்களின்

# அஞ்சலி மலர்

05. 08. 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் மு. ஆனந்தலிங்கம் அவர்கள்

தோற்றம்: 13.09.1949 மறைவு: 06.07.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் முத்துலிங்கம் ஆனந்தலிங்கம் அவர்களின் ஆன்ம சாந்தி குறித்து அன்னாரின் குலதெய்வமாகிய புங்குடுதீவு, ஸ்ரீ வரசித்தி விநாயகரைப் பரவுதல்

ஓம் என்னும் பிரணவ சொரூபனே உலகனைத்தும்
உன்வயிற்றுள் அடக்கியருள் மோனப் பரம்பொருளே
ஞாலமஃதில் சற்குணமும் நற்குலமும் ஓங்கு புகழ்
சீலன் நின் பாதமலர் சரண்.

வரசித்தி விநாயகனே வன்துதிக்கை ஐங்கரனே
அனுதினமுன் பதம் பணியும் அன்பன்ஆ னந்தலிங்கம்
தரணியில் தன்கடன் இயற்றி தாம்தேவ பணிபுரிய
மருவி நின்றான் நின்மலர்த்தாள் சரண்.

ஓங்கு துதிக் கையழகா ஒளிர் யானை முகத்தழகா
பாங்குடனே தன்சுற்றம் பண்பு மிக காத்து நின்ற
தீங்(கு) அறியா அரு மைந்தன் திறம் மிகுஆ னந்தலிங்கம
மாணிபுமிகு நின் திருத்தாள் சரண்.

வேறு

பண்பு தவழ் திறமை மிகு நொத்தாரிசு
பசுந்தீவு வழிவந்த முத்துலிங்கம்
மங்கையரின் திலகமென ஒளிரும் அம்மை
மாதேவிநா கரத்தினம் ஈன்ற மைந்தர்
ஒன்பதில் ஓர் அருமைந்தன் உயர் அகத்தான்
ஒளிரும் அருள் எழில் தவழ் ஆனந்தலிங்கம்
சொல்லழகும் செயல்திறனும் மிகுந்த நங்கை
தூயகெங் காதேவி கரங்கள் பற்றி

வள்ளுவர்சொல் இல்லறத்தில் வழுவா நின்று
மங்கை ஜெய சாந்தியுடன் மறுவில் மைந்தன்
துய்ய ஹரி தோழமைபூண் அருச் சுனனும்
தூய இரு நன்மகவாய் மிளிர்ந்து நிற்ப
மன்னவன் செய் வினைப் பயனோ மங்கை, மைந்தர்
மறுவில் இழை முற்பயனோ அறியேன் ஐயன்
செய்ய நின் திருவடிகள் ஒன்றிணைந்தான்
திவ்வியமே செழுஞ் சுடரே போற்றி! போற்றி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தோனியார் வணக்கம்

கருணை மிகு அருள் சுரக்கும் குருவே உன்னை
கங்கு பகல் வேண்டிடும்ஆ னந்தலிங்கம்
அருமனையாள் கெங்கா தேவியோடு
அருமை மைந்தர் இருவரையும் பிரிந்து சென்றல்
முறையிதுவோ! அன்பின் உருவான தேவா
முந்தி வர மளிக்கும் உன் கருணை வெள்ளம்
சதமெனவே முழ்கி நிற்கும் தனையன் என்றும்
தஞ்சமென நின்பதமே சார்ந்தான் அந்தோ!

## வரலாறு
## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுஸ்ரீ விக்கிரம ஆடித் திங்கள் ஆறாம் நாள்
பூண்டதொரு பூர்வபக்க ஷஷ்டியினில் - ஓங்குபுகழ்
ஐயன்ஆ னந்தலிங்கம் அரும்பிறவி தனைநீத்து
துய்ய சிவன் தாள்சேர்ந்த நாள்.

## தாய்த்திருநாட்டின் சிறப்பு

பொங்குதிரை இந்துமகா சமுத்திரத்தின்
மங்காத மாமணியாய் விளங்கும் ஈழ
தங்குபுகழ் எழில்மிகுந்த தனிநந் நாட்டின்
தலையாய யாழ்ப்பாண நகரின் மாட்டு
திங்களென தண்ணொளியும் திருவும் மிக்க
செந்தமிழும் சைவமும் மிக்(கு) ஓங்கி நிற்கும்
பண்புமிகு நன் மக்கள் வாழும் தீவு
பார்புகழும் புங்குடு தீவு அன்றோ!

கற்பரசி கண்ணகையாள் கோவில் கொண்ட
கவின்கொள் எழில் மாடங்கள் மிகுந்த தீவு
பொற்பு மிகு வனிதையர்கள் நீர் சுமந்து
பூ இதழில் நீர் சொட்ட அடிமேல் வைத்து
செப்பமுற நடைபயிலும் காட்சி அன்றோ
திருமகளும் கலைமகளும் அசந்து நிற்கும்
ஒப்புயர்வில் நாற்குணமும் ஒன்றி நிற்கும்
ஒளிவதன மாதர் குலம் ஒளிரும் தீவு.

வணிகம் மிகு தழைத்தோங்கும் வனப்பு மிக்க
வயல் தோட்டம் ஆங்காங்கே நிறைந்த தீவு
திறமைமிகு அறிஞர்களை ஈன்றெடுத்து
திக்கெலாம் அனுப்பிவைத்த திவ்ய மண்ணின்
பெருமைதனை இயம்பஆ யிரம் நாவோடு
பின்னி நிற்கும் ஞானமும் பேரறிவும் வேண்டி
இறைவன் பதம் பணிகின்றேன் மறையின் தேவா
இத் தீவின் தனிப்பெருமை இயம்பற் பாற்றோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

புன்மை தவிர் நன்மக்கள் வாழும் தீவின்
புகழ் பெருகும் பெருங்குடியின் அருமை மைந்தன்
பண்புநெறி தவறாத பெற்றோர் தம்மை
பரமசிவன் அம்மைசிவ காமியாக
சந்ததுமும் துதித்து நற் கடன் இயற்றும்
தனயன் கண பதிப்பிள்ளை அரு மனையாள்
முந்து புகழ் நற்குலத்தாள் அன்னப் பிள்ளை
முழுமதியாள் செழுங் கரங்கள் பற்றி நிற்ப

இல்லறமே நல்லறமாய் இணைந்து நிற்ப
ஈடு இணையற்ற ஓர் தலைமகனாய்
நல்லகுண நிறைவுபெறு முத்துலிங்கம்
நம் தீவின் திறமைமிகு நொத்தாரிசு
சீருடை ஓர் தம்பியுமாய் அண்ணனோடு
சேர்ந்து நின்று இணைபிரியா பணிபுரியும்
போர்மிகு நொத்தாரி(சு) அருளம்பலமும்
பின் இருவர் நால்வருமாய் இணைந்து நிற்ப

ஆற்றல்மிகு அங்கயற் கண்ணி ஆங்கே
அறிவு புகல் ஆசிரியை யாகிநின்று
தேற்றமிகு எண் எண் கலைகளையும்
சிறப்புமிக ஊட்டிநிற்ப அருமைத் தம்பி
வாட்டமிலா இன்முகத்தான் கடைமை வீரன்
மகாலிங்க சிவம் அதிப ராகிநிற்ப
நாற்றிசையும் வியப்புமிக நால்வர் தாமும்
நானிலத்தில் நலமுறவே திகழ்ந்து நின்றார்.

முன்னவனாம் முத்துலிங்கம் மூன்றுகாலம்
முற்றுமற தெளிந்த நுண்ணறிவு மிக்கான்
தன்னலமே பிறர்நலமாய்க் கருதி நின்று
சந்ததமும் உதவி செய்யும் தகைமை மிக்கான்
வந்தவர்க்கு அமுதினொடு உணவும் நல்கி
வள்ளுவர் சொல் விருந்தோம்பல் வழுவா நின்று
என்றுமே இனியவனாய்த் திகழ்ந்த ஐயன்
எழில்மிகு நன் மணப்பருவ மெய்தி நிற்ப

வேறு

செப்பரிய சிறப்பு மிகு தீவில் ஆங்கே
திவ்யகுல மரபுவழி வந்த செம்மல்
மிக்கு புகழ் தனிநாயக வழியில் வந்த
மேன்மை மிகு சரவணமுத்(து) உடையார் தாமும்
நற்றவத்தாள் நவில் பெருமை குலத்து நங்கை
நல்லியளாள் செல்லம்மா அம்மை தன்னை
செப்பமுற அணைத்து இல் வாழ்வில் நின்று
திறமைமிகு அறுவர்தமை ஈன்றெடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தம் நிறை கருணைமிகு சிவயோகமும்
திறமைமிகு தபாலதிபர் கணேஷினோடு
பக்திமிகு இன்மொழியாள் இராசம்மாநற்
பார்புகழும் இராசேந்திர விதானையாரும்
வித்தகியாள் பண்புநிறை அருங்குணத்தாள்
வீங்குபொறை மிகுநாக ரத்தினமும்
சித்திமிகு வழக்கறிஞர் நடராஜா யாம்
செப்பரிய அறுவராய்த் திகழ்ந்து நிற்ப

அறுவரில் ஐங் கரன் நாமங்கொண்ட ஐயன்
அறநெறியே பெருநெறியாய் நன்குணர்ந்து
பிறவிதரும் இல்வாழ்வை நீங்கி நிற்ப
பின்னவரும் முன்னவளும் பெருமைமிக்க
துணைவருடன் இல்லறத்தில் தூய்மை மிக்கு
தொல்புகழ் கொள் குடி மைந்தர் வேண்டி நிற்ப
மலைமகளும் வியப்புறும் பொற்சிலையே யன்ன
மங்கை நாக ரத்தினமும் மலர்ந்து நிற்ப

வேறு

முத்துலிங்கஐயனுக்கோர் துணையை வேண்டி
முதுபெருமை மிகு குலத்து நங்கை தேடி
பித்தராய் அலைந்(து) அலுத்து பெற்றோர் தாமும்
பிறைசூடும் பிரான் கருணை வேண்டி நிற்ப
முற்பிறப்பின் தவப்பயனோ அன்றி மூதோர்
முழுவினையின் நற்பயனோ அறியேன் நாக
செப்புமிள ரத்தினத்தின் கடைக்கண் பார்வை
சீலனை அன்றீர்த்த தன்மை செப்பற் பாற்றோ

வள்ளுவர் சொல் இல்லறத்தில் வாழ்வு கண்டார்
வான்புகழும் நற்பணிகள் இயற்றி நின்றார்
சொல்லரிய திறமைமிகு சிரேஷ்ட மைந்தன்
துயர் அகல வெளி அனுப்பும் துரிதமிக்க
வல்ல மகன் இரத்தின லிங்கத்தோடு
வனிதையரின் திலகமென இலங்கும் அம்மை
நல்லியளாள் கருமேக வண்ணன் ஒப்பாள்
நலம் திகழும் இரத்தின லோசனியும்

முன்னோர்கள் வகுத்தவழி மூலிகைகள்
முதுநோய்கள் அற நீக்கும் தேர்வு மிக்காள்
சொல்லும் ஆயுர் வேதடாக்டர் நாளும்
சுகமளிக்கும் இரத்தின லீலாவோடு
தன்னிகரில் அருங்குணத்தான் சக நண்பர்க்கு
சால்புநெறி அறிவுரைகள் நல்கும் அன்பன்
சொல்லும் எழில் நடையுடையான் சோர்வு இல்லான்
தூயமைந்தன் ஆனந்த லிங்கம் தானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமே இளமைதவழ் இனிய மைந்தன்
ஏறுமயில் வேலவனின் நாமம் கொண்டோன்
நன்றெனவே தன்சுற்றம் காத்து நிற்கும்
நடுவில் மகன் நற்குமார லிங்கத்தோடு
சிந்தைநிறை கருணைமிகு இரத்தின ராணி
செழுங்கமல மலர் முகத்தாள் செல்லத்தம்பி
என்றுமே மனங்கோணா இயல்பு மிக்கான்
இன் முகத்தான் சிவநேச லிங்கம் தானும்

இவ் வேழு புத்திரரும் போதா தென்று
ஏந்திழையாள் இறைவனடி வேண்டி நிற்ப
சொல்லழகாள் தூயநெறி வழுவா நங்கை
தூபமொடு மலர்தூவி தேவி பாதம்
செவ்விதழால் துதி இரத்தின மாலாவோடு
தேசுமிகு மதிவதன அருமைத் தங்கை
நல்லியளாள் இரத்தின நளினி தாமும்
நவரசமாய் ஒன்றிணைந்து மிளிர்ந்து நிற்ப

வேறு

ஒன்பதில் மூவர் தாமும் உறுதுணை தேடி ஞான்றும்
இன்பவாழ் வெய்திநிற்ப இனிய ஆனந்தலிங்கம்
பண்பினில் முதிர்ந்து நின்று பசுந்தமிழ் சேவையாற்றி
நன்றென இல்லகத்தாள் நலமுடன் வேண்டிநிற்ப

வேறு

யாழ்நகர் அருகமைந்த நலமிகு சிற்றூர் நாளும்
ஆவினம் சொரியும் பாலும் அளவில் கற்பக தருவும்
சோர்விலா முயற்சியாலே சுகந்தநற் பயிர்வளவும்
மேலுறும் அல்லைப்பிட்டி மிகுவளம் மிக்கதன்றோ

சொல்லும் வளமிகு நற்தொல் சிற்றூர் அஃதினிலே
அல்லிமகா ராணி அருள் ஆட்சி செய்து நின்றாள்
மன்னுபுகழ் செந்தமிழும் மறைநான்கும் நின்றொலிக்கும்
தொல்புகழ்கொள் சிற்றூர் தூய்மை மிகுந்த பதி

வேறு

பல்வளமும் மிகு அல்லைப் பிட்டிதன்னில்
பண்புதவழ் நற்குலத்து விதானையார் நாம்
சொல்லரிய திறமைமிகு அருளம்பலம்
தூயநெடுந் தீவுவழி வந்த ஐயன்
மெல்லியளாள் மாதர்குல அணங்கு அன்னாள்
மேன்மைமிகு உயர்குடியில் மிளிர்ந்த நங்கை
செய்ய மலர்க் கரம்பற்றி இன்பமிக்கு
இல்லறமே நல்லறமாய் இணைந்து நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையரும் அருமைந்தர் வேண்டி நிற்ப
அப்பனையும் மிஞ்சு திறன் மிக்க மைந்தன்
சொல்லுபுகழ் மிக்கநல் விதானை யாராய்
துயரகற்றும் சமாதான நீதவானாய்
வல்ல உடல் சோதகனாய் மாயோன் நாம
வல்லிபுர நாதனொடு வண்மை மிக்க
நல்லதம்பி அரசாங்க லிகிதர் நாளும்
நலந்திகழும் சண்முக ரத்தினமும்

வல்லிபுர நாதனுக்கோர் மனையைத் தேடி
வனப்புமிகு நகரெல்லாம் சென்றுவந்தும்
சொற் திறனும் செயற் திறனும் ஒருங்கே கொண்ட
தூயகுலப் பெருமையொடு மகவுக் கேற்ப
நல்லஒரு மருமகளை வேண்டி நித்தம்
ஞாலமுதல் அம்மையரைத் தொழுது ஏத்த
வல்ல மகன் ஸ்ரீராமன் வண்மை மிக்கான்
மறுவில் நிறை மணப்பருவ மெய்தி நின்றான்

வேறு

அன்னை திருவருளும் கூடிநிற்ப
அன்புதவழ் அருங்குலத்து அண்ணல் ஆன்றோர்
தங்கு புகழ் வேலணையின் தகமை மைந்தன்
தாமோதரம்பிளை தயைகொள் அம்மை
செம்பவள இதழ் தில்லையம்மா ஈன்ற
திறமைமிகு மனோன்மணி சீர் சிவஞானமும்
அன்புதவழ் இராஜ பரமேஸ்வரி
ஆரணங்கு மங்கையற் கரசியோடு

ஈரிரண்டு புத்திரரின் அருமைத் தங்கை
எழில் மிகுந்த பொற்சிலையோ இயற்கை அன்னை
சேயுதிறன் ஒப்புயர்வில் தன்மையஃதை
சித்தரிக்கும் வரதலட்சுமியினோடு
ஐவருமே ஒன்றிணைந்து அகமஃது ஒன்றாய்
அன்புமிக வளர்ச்சியுற்று நின்றகாலை
செல்லமகள் மனோன்மணிக்கோர் வரனைத் தேடி
திக்கெல்லாம் சென்றுவந்தார் திறன்கொள் தந்தை.

வேறு

முன்னோர் தவப்பயனும் தாமும் செய்த
முழுவினைப் புண்ணியமும் ஒன்று கூட்ட
நல்லோர் அருஞ்சுற்றம் சூழ நிற்ப
நான்மறையும் பண்ணிசையும் வானளாவ
வானோர் மலர்தூவி வாழ்த்தி நிற்ப
வல்லிபுர நாதனுடன் மனோன்மணியும்
சீராக எரிவலம் வந்த காட்சி
ஸ்ரீராமன் சீதை மணக் கோலக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் சொல் விருந்தோம்பல் வகுத்து நின்று
வண்மைமிகு இல்லறத்தின் பெருமை கண்டார்
துள்ளு மயில் வாகனனின் நாமம் கொண்ட
சோர்வில் எழில் சண்முக நாதனோடு
மெல்லும் அருள் தயாபரனும் மேலும்
மிகுந்த அருட் செல்வ நாதன் தாமும்
வல்லவராய் வியாபார விருத்தி மிக்கு
மறுவில் நற் பண்புமிக மகிழ்ந்து நிற்ப

அண்ணன்மார் மூவர்க்கும் இனிய தங்கை
அயன் படைப்பின் அதிசயமோ அறியேன் அம்மா
வல்ல சிவன் சடையுறையும் கெங்கா தேவி
வன்மைமிகு திருநாமம் கொண்ட நங்கை
நல்லியளாள் நடைஎழில் பொற்சிலையே ஒப்ப
நாதன்துணை வேண்டி நிற்ப நவிலும் ஆன்றோர்
என்றும் மிகு நல்லியல்ஆ னந்தலிங்கம்
ஏந்திழையாள் கரம்பற்றி நின்றகாட்சி

வானவரும் பூமாரி பொழிந்து நிற்ப
மண்ணவரும் மலர்தூவி வாழ்த்தி நிற்ப
வேதியர்கள் நால்வேத மோதி நிற்ப
விண்ணதிர வாத்தியங்கள் ஒலித்து நிற்ப
நாதன் எழில் பொற்றாலி ஏந்தி நின்று
நங்கை தனக்கு அணிதூய நிறைகண் காட்சி
பூதலத்தில் என்றுமே மறக்க வொண்ணா
புனிதமிகு தெய்வீகக் காட்சி யன்றோ!

அன்பென்னும் ஓர் வடத்துள் இறுகப் பின்னி
ஆல்போல அயல் சுற்றம் தழைத்து நிற்ப
இன்பமெனும் நவரசத்துள் மூழ்கி நின்று
இனிய ஒரு அருமை மகள் ஜெயசாந்தியும்
பண்புதவழ் விவேகநிறை மைந்தன் ஈடில்
பாரதப்போர் வெற்றிகொண்ட விஜயன் நாமம்
கொண்ட மகன் அர்ஜுனும் குலவி நிற்ப
குவலயத்தில் நிறைந்தபெரு வாழ்வு கண்டார்

வேறு

பண்புமிகு இல்வாழ்வின் கடமை தப்பா
பரிவு நிறை நெஞ்சகத்தான் ஈழம் கண்டு
செந்தமிழும் அருங்கலையும் வளரவேண்டி
தினம் தினமும் அரும்பாடு பட்ட ஐயன்
முந்துகொடு வினைப்பயனோ அன்றி மற்றோர்
முனிசாப கேடதுவோ அறியேன் காலன்
லிங்கமஃதின் உயிர் கவர்ந்து சென்றான் இஃது
நீதியோ! நிலவுலகின் கொடூர மன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனும் பொற் சிவிகை அனுப்பி வைப்ப
ஏழுலகும் மலர்மாரி தூவி நிற்ப
மங்கையரின் அழுகையொலி வானளாவ
வருசுற்றம் நண்பரெலாம் மலைத்து நிற்ப
திங்களொளி சிவிகையின் மேல் அமர்ந்து ஐயன்
சேல்விழிசெவ் அரம்பையர்சா மரைதாம் வீச
விந்தைமிகு விண்ணுலகம் புகுந்த காட்சி
மேதினியில் காணவொண்ணா காட்சி அன்றோ!

## ஆருயிர் மனைவி கெங்காதேவி பிரலாபம்

அன்று மணப் பந்தலில் நாம் இருந்தபோது
அருஞ்சுற்றம் நண்பரெலாம் மலர்கள் தூவி
இன்பமிகு நீடூழி வாழ்க வென்று
எமைவாழ்த்திச் சென்றதுவும் பொய்த்த(து) ஐயா
அன்று வந்த தலைவலி என் அருமை ஐயன்
ஆருயிரைக் கவர்ந்த தன்மை அறிகிலேன் நீர்
இன்னும் எங்கள் உடன் அருகில் இருக்கின்றீரோ
இல்லையோ அறியவொண்ணா தவிக்கின்றேனே.

பொற்றாலி உந்தன்திரு மார்பில் வைத்து
பூவுடனே வாய்க்கரிசி இட்டு உம்மை
எட்டாத தேவுலகம் அனுப்பிவிட்ட
ஏழையேன் செய்கொடுமை என்னே ஐயா
சிட்டாக களித்துநின்ற அருமை மக்கள்
செயலிழந்து கண்கள் நிறை கண்ணீர் வார
பித்தாக நிற்கும் எமை பார்த்திட்டீரோ
பேதை, எமக் கிவ்வுலகில் இனியாருள்ளார்.

அந்தகனே நீ ஒளிந்து நின்று அன்று
அழிபாசக் கயிறெறிந்த கொடூரம் தன்னை
கண்டிலனே, கண்டிருந்தால் கசக்கியுன்னை
கண்டதுண்ட மாய்ப் பிய்த்து எறிந்திருப்பேன்
எண் திசையும் வியாபிக்கும் இறைவா எந்தன்
இரும்பொறைசீர் கற்புநெறி வன்மை எங்கே
நன்றிதுவே நானிலத்தில் நியதி இஃதே
நாயகனே நமக்கினி யார் துணையிருப்பார்.

## அருமை மகள் ஜெயசாந்தி பிரலாபம்

அப்பா நீ என்னை உன் மடியில் வைத்து
அறிவுமிகு சிறுகதைகள் சொல்லித் தந்தாய்
எப்போதும் என்மனதில் நிலைத்து நின்று
ஏற்றமிகு நன்நெறியைக் காட்டி நிற்கும்
தப்பாது தினப் பாடம் சொல்லித் தந்து
தகுந்தநெறி தனித் திறமை கற்றுத் தந்த
அப்பா நீ எனை விட்டு எங்கு சென்றாய்
ஆரெனக்கு உன்போல துணையிருப்பார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை மகன் அர்ஜுன் பிரலாபம்

அக்காவோடு என்னையும் நீ ஒன்றணைத்து
அறிவுரைகள் அன்போடு சொல்லி நிற்பாய்
எப்போதும் கேட்பதெலாம் வாங்கித் தந்து
எம்முடனே சேர்ந்து விளையாடி நின்றாய்
முப்போது மண்முட்டி சுற்றி உன்றன்
முழு உடலை நனைத்துவிட்டு மீண்டும் அன்று
தப்பாது சூடுதரும் செந்தணலை
தலையருகில் வைத்தேனே அருமை அப்பா.

உனைச் சில நாட்களாய்க் காணோம் அப்பா
உன்படத்தின் அருகில்விளக் கேற்றி வைத்தார்
எனக்கொன்றும் புரியவில்லை அருமை அப்பா
எப்போது வந்தெம்மை அரவணைப்பாய்
உனைத்தவிர சுற்றத்தார் எல்லாம் உள்ளார்
ஒன்றுமே அம்மாவும் சொல்லா நிற்பா
தொலைக்கெங்கோ சென்றீரோ அப்பா அன்றிச்
சோதிவடி வானவன்தாள் சேர்ந்திட் டீரோ.

## சகோதரர்கள் இரத்தினலிங்கம், இரத்தினலோசனி, இரத்தினலீலா, குமாரலிங்கம், இரத்தினராணி, சிவநேசலிங்கம், இரத்தினநளினி ஆகியோர் பிரலாபம்

எம் அருமைச் சோதரமே எமக்கு என்றும்
ஏற்றமிகு அறிவுரைகள் பகன்று நிற்பாய்
நல்லவர்க்கு நல்லவனாய் நாளும் நின்று
நற்பணிகள் தினமியற்றும் அரும் பிறவி!
சின்ன ஒரு கோபமெனின் சிவந்த சொண்டை
சிறுபற்க ளால் அழுத்தி பொறுமை கொண்டு
நல்லவழி பின்பகரும் உடன் பிறப்பே
நானிலத்தில் எமைப் பிரிந்து எங்கு சென்றாய்?

உன்செய்தி கேட்டதும் ஓடோடி வந்தோம்
உன் இனிய குரல்கேட்காப் பாவியானோம்
எம்மினிய மாலாவை இழந்து நின்று
ஏங்கி நிற்கும் எமக்கு இன்னோர் பேரிடியாய்
நின்னையும் இன்று இழந்து நின்று துடிக்கும் யாமும்
நீள்துயரில் நிலைகுலைந்து நிற்கும் கெங்கா
செல்ல மக்கள் இருவரையும் தேற்ற மாட்டா
திசை தெரியா அலைகடலில் தெப்பமானோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை மாமியார் மனோன்மணி பிரலாபம்

செல்லமகள் கரம்பிடித்து சீர்மை சென்று
தேசுமிகு இருசெல்வம் பெற்றெ டுத்து
நல்லவழி நெறிமுறைகள் எடுத்து ரைத்து
நாளும் எம் குலவிளக்காய் திகழ்ந்த எந்தன்
அன்புமிகு அருமருகா! உன்றன் செய்தி
அங்கமெலாம் புகுந்துசெந் தணலாய் என்றும்
பொன்றாது நிற்பவும் நின்பொன் னுடலை
பூப்போட்டு வணங்கவொணா பாவி யானேன்.

## மைத்துனர், மைத்துனி சந்திரலீலா, தட்சணாமூர்த்தி, விஜயநாதன், ரஞ்சினி, ஜெயரத்தினம், யசோ, உதயகுமார், தயாபரன், அருட்செல்வநாதன், ஜமுனா ஆகியோர் பிரலாபம்

அத்தாவென் றோடிவரும் எம்மையென்றும்
ஆசையுடன் கரம் நீட்டி அரவணைப்பாய்
எத்தகைய துயர் துன்பம் வந்த போதும்
ஏற்றவழி சொல்லியெமைக் காத்து நின்றாய்
வல்ல ஒரு மைத்துனனை நாமிழந்து
வாழ்வில் ஒரு பேரிழப்பைத் தாங்கவொண்ணா
அல்லலுறும் எமைத் தேற்ற இனியாருள்ளார்
அந்தகனே உன் கொடுமை என்னே என்னே!

## பெறாமக்கள், மருமக்கள் நேதாஜி, சிவகாமி, தீபன், மயூரா, பிரயாங்கி, மதுராங்கி, மாலன், ஜெயந்தி, பொன்னம்பலம், ஐங்கரன், சரவணன், சங்கீதை, சாரங்கி, ஜீவன், செந்தூரன், அகிலன், அஜந்தா, ஜனனி ஆகியோர் பிரலாபம்

அன்போடு எமை அணைத்து முத்தம் தந்து
அறுசுவைசேர் சிற்றுண்டி ஊட்டி நிற்பாய்
ஒன்றாக எம்முடனே இணைந்து நின்று
ஓயாமல் விளையாடி மகிழ வைப்பாய்
நன்றுமிக நல்லுரைகள் பகன்று என்றும்
நல்வழியே காட்டிநிற்கும் உன்னை நாமும்
என்றுமே காத்து நிற்போம் மறந்திடாமல்
இனியகதை சொல்லுமுனை எங்கு காண்போம்?

## சுற்றத்தார் பிரலாபம்

தத்துவம் பலகூறி சித்தம் தெளிவிக்கும்
வித்தகன் கரு மேகவன்
நித்தமும் தன் கடமை சொட்டும் தவறாத
உத்தமன் கருணை உளத்தான்
எத்துணை தேடிவரும் சுற்றமொடு மற்றவர்
இயைந்துதவி செயும் இயல்பினான்
எமைவிட்டு இமையருல கெய்தினான் இரு நிலத்தில்
எமக்கினியார் ஆனந்தனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றம்

பூவுலகில் பிறந்த உயிர் அனைத்தும் நித்தம்
புண்ணியங்கள் இயற்றிமுன் தொடர் வினைகள்
தீவினைகள் அகற்றி நற் பணிபுரிந்து
சித்தமஃதில் பெருங் கருணை நிரம்பப் பெற்று
தூயதம் கடமைகளை செவ்வே செய்து
துயரமுறும் எவ்வுயிர்க்கும் கருணை காட்டி
நேயமிகு இறைவன் திருப்பதம் பணிந்து
நிமலனடி சேர்ந்திடுதல் நியதி அன்றோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## தேவாரம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வாணாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுலையும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

## திருவாசகம்

இரந்திரந் துருக என் மனத்துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச் சேவடியாய்
திருப் பெருந் துறையுயை சிவனே
நிரந்தஆ காயம் நீர் நிலம் தீ கால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் சித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூந்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலிய சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

பட்டினத்தார் பாடல்

ஐயுந் தொடர்ந்து விழியும் சொருகி அறிவிழந்து
மெய்யும் பொய்யாகி விழுகின்ற போது ஒன்று வேண்டுவன் யான்
செய்யும் தொடர் ஒற்றியுடையீர் திருநீறு மிட்டு
கையும் தொழப் பணிந்து ஐந் தெழுத்து ஓதவும் கற்பியுமே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள அப்பா,

உங்கள் உயிர் பிரிந்தபோது மிகவும்
கவலைப்பட்டோம்.
நீங்கள் நீண்ட ஆயுளுடன் நெடுநாள்கள்
இருந்திருக்கலாம்.
எமக்குத் தெரியும் உங்கள் அன்பான
ஆன்மா எங்களுடன்தான் இருக்கிறது.
நீங்கள் கடைசியாகக்
கேட்டுக்கொண்டதுபோல,
இறைவனை உங்களுக்காகவும்
எங்கள் எல்லோருக்காகவும்
கோவிலுக்குச் சென்று வணங்குவோம்.
எல்லோரும் உங்களை வந்து பார்த்து
இறுதி மரியாதை செய்தார்கள்.
நாங்கள் உங்கள் ஆசைகளை
பூர்த்திசெய்து வாழ
ஆண்டவனை வேண்டி,
எங்களை வழிநடத்தும்படி வணங்குகிறோம்.

உங்கள் அருமைக் குழந்தைகள்
ஜெயசாந்தி, அர்ஜுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சாதாரண மனிதனின் உன்னதம்

மனிதன் என்பவன் பிறக்கும்போது இறப்பும் நிச்சயம் என்ற நிலை இருக்கையில், இறந்தவரைப்பற்றி கவலைப்படுவதில் அர்த்தம் என்ன இருக்கிறது எனக் கேட்கும் காலம் இது.

மனித வாழ்வின் சிறப்பு என்பது இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒருவன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதே. இதில்தான் அவனது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் தேடப்படுகிறது.

பல அம்சங்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை. தனது பெற்றோருக்காக, தனது மனைவி, பிள்ளைகளுக்காக, தனக்காக, தான் பிறந்த சமூகத்துக்காக, தான் வாழும் சமூகத்துக்காக என அவ் வாழ்வு பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் அவன் நேசிக்கும் சிலவற்றுக்காக தனது வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்துக்கொள்கிறான்.

உங்கள் கரங்களில் உள்ள இச் சிறு நூலின் நாயகன் முத்துலிங்கம் ஆனந்தலிங்கம் அவர்களின் வாழ்வும் அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றாகவே அமைந்திருந்தது.

ஒரு பெரும் அரசியல்வாதிக்கு உரிய குணாம்சங்களைக் கொண்டிருக்காவிடினும், ஒரு சாதாரண மனிதன், மற்றைய உயிரினம் துன்பத்தில் பரிதவிக்கும்போது துடித்துப்போகும் மனோபாவம் நிறையவே உடையவராக இருந்தார்.

அரசியல் உரிமை, மனித உரிமை என்பவற்றில் மிகவும் அக்கறையாகவிருந்தார். தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் தீவிர போக்கை நோக்கித் திரும்பியதற்குக் காரணம் லண்டனில் கல்வி கற்றுவந்த சில மாணவர்களின் விடாப்பிடியான முயற்சிதான். தமிழர் விடுதலை இயக்கம் (**Tamil Liberation Organization**) 1977இல் ஆரம்பிக்கப்பட்டபோது அந்த ஆரம்ப முயற்சிகளில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.

1977ஆம் ஆண்டில் தமிழ் மாணவர் அமைப்பு (**Tamil Student Organization**) சவுத் பாங் பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டபோது அதன் ஆரம்பக் கூட்டத்தில் 'என் உடன் பிறப்புக்களே' என கலைஞர் கருணாநிதிபோல பேசி, சகலரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார்.

ஒவ்வொருவரும் தலா ஒரு ஸ்ரேர்லிங் பவுண் தாருங்கள் எனக் கேட்டு மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்து அந்தச் சிறிய தொகையிலே அரசியல் பணிகளைச் செய்துவந்தபோது, தனது முழு நேரத்தையுமே பிரச்சாரங்களுக்காக செலவழித்தார்.

ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை நடாத்தியபோது மிகவும் ஆக்ரோஷத்துடன் செயல்படுவார். இதனால், பொலிசாருடன் மோதிய சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த வேளையில் அவரது காலில் ஏற்பட்டுள்ள சிறு ஊனத்தைக் காட்டி, 'உன்னால் தப்பி ஓடமுடியாது; பாதுகாப்பான இடத்தில் நில்' என நண்பர்கள் வற்புறுத்தினால், 'உனக்குத் தெரியாது, என்னைப் போன்றவர்கள் இதில் ஈடுபட்டால் பொலிசார் அதிகளவு தொந்தரவு செய்யமாட்டார்கள்' என தனக்குள்ள பலத்தை விளக்குவார்.

70களில் லண்டனில் அதிகளவு தமிழ் மக்கள் இல்லாத வேளையில், தமிழ் பேசும் மக்களின் பிரச்னையை சர்வதேச மயப்படுத்துவதில் தனது பங்களிப்பை வழங்கிய அவர், தான் பிறந்த மண்ணை எவ்வாறு நேசித்தார் என்பதை அவரது இனிய நண்பர் சார்ள்ஸ் குறிப்பிடுகையில்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆனந்தலிங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் தொடர்பான கூட்டங்களில் தவறாது பங்குபற்றி வந்தவர். அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றுவோர் தமது விபரங்களைப் பதிவு செய்வார்கள். அவ்வாறு பதிவுசெய்யும்போது தனது பெயரைத் 'தீவான்' என எழுதிப் பெருமைப்பட்டார். பலர் இதனை வெட்கமாகக் கருதிய காலத்தில் இவர் பெருமையோடு இணைத்துக்கொண்டார்' என்று சொன்னார்.

நண்பர்கள் மத்தியில் அவர் இருக்கும் வேளையில் பலரின் மனதிலும் ஒரு தாக்கத்தைத் தரும் விதத்தில் அவர் பேசுவார். அதாவது, பிரச்னைகளை மிக நகைச் சுவையாக சொல்வதும், அணுகுவதும் பலரைக் கவர்ந்த நிகழ்வுகள்.

'இவர் இப்படிச் சுகவீனமாக இருந்தாரா? ஐயோ, அந்த நல்ல மனிதனைப் பார்க்க தவறிவிட்டேனே' என கவலையுடன் கூறிய நண்பர்கள் பலர்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரங்களைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்கள் துன்பங்களை அநுபவித்தபோது ஆலய வாசல்களிலும், புகையிரத நிலையங்களிலும், பாராளுமன்ற முன்றலிலும் மழையிலும், குளிரிலும் நின்று துண்டுப் பிரசுரங்களை வழங்கி, தாயகத்து மக்களின் நிலைமைகளை விளக்கினார்.

பத்திரிகைகளையும் நூல்களையும் நன்றாகவே வாசிக்கின்ற பழக்கத்தின் காரணத்தால் எந்தப் பிரச்னையிலும் நியாயமான அறிவு பெற்றிருந்தார். இதனால் எந்த விடயத்திலும் விவாதிக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது.

பிரிட்டனின் ஆங்கிலப் பத்திரிகைகளில் தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் தொடர்பாக தவறான செய்திகள் வெளியிடப்பட்ட நேரங்களில் தவறைச் சுட்டிக்காட்டி எழுதினார். பத்திரிகைகள் பிரசுரிக்காவிட்டால் பரவாயில்லை; ஆனாலும் எழுத வேண்டும் என்று எழுதினார்.

தான் பிறந்த மண்ணுக்காக தனது வாழ்வின் இளமைக் காலத்தை செலவிட்ட அவர், தனது சொந்த மக்கள் மத்தியில் ஏற்பட்ட மோதல்களை எண்ணி மிகவும் மனம் நொந்து காணப்பட்டார். இவைகளே இவரது பிற்கால நோய்க்குக் காரணமாகவும் அமைந்தன. அவர் தனது உடல் நலத்தைப் பேண தவறினார்.

நண்பர்கள் மத்தியில் இவரது வாழ்வில் சமயப் பற்று குறிப்பிடத்தக்க அம்சமாகும். பிறப்பால் சைவனாக இருந்போதிலும் கிறிஸ்தவ தேவாலயத்துக்கும் அடிக்கடி செல்லும் ஓர் அதிசயிக்கத்தக்க பண்பு இவரிடம் இருந்தது.

அந்தோனியாரிடம் அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்ததால் 'கிறிஸ்ரல் பலஸ்' அந்தோனியார் தேவாலயத்துக்கு பிரதி செவ்வாய்க்கிழமைகள் தோறும் சென்று வந்தார். இவரது நல்ல சிந்தனைக்கு அவரின் ஆன்மீகப் பற்று பெரும் உதவியாக இருந்துள்ளது.

ஒரு சாதாரண மனிதன் என்ற எல்லைக் கோட்டுக்குள் அவரது பணி போற்றத் தக்கது. தன்னுடைய இனத்துக்காக தன்னாலான பணியைச் செய்த அவரின் நினைவுகள் என்றும் நினைவுகூரத் தக்கவை. அவரது நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

ஆனந்தலிங்கம் அவர்களின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைந்ததற்குக் காரணம் அவரது சகோதர சகோதரிகளும், மனைவி, பிள்ளைகளுமே. அவரது பிரிவு இவர்களுக்கு பேரிழப்பாகும். பிரிவுத் துயரில் கலங்கிக்கொண்டிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லை.

இத் துயரிலிருந்து மீண்டு, ஒரு சிறந்த எதிர்காலத்தை நோக்கிய பாதைக்கு செல்ல சகல பலமும் அவர்களுக்கு கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

நண்பர் ஆனந்தலிங்கம் அவர்களின் ஆன்மா சாந்தி அடைவதாக!

**வி. சிவலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது குடும்பத்தின் பேரொளியாக விளங்கிய
அமரர் முத்துலிங்கம் ஆனந்தலிங்கம் அவர்களின் பிரிவின்போது
வருகைதந்து பல்வேறு உதவிகளையும் நல்கி
எமக்குப் பேருதவியாக இருந்தோர்,
அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்,
அஸ்திக் கிரியைகளில் கலந்துகொண்டோர்,
ஆறுதல் வார்த்தைகள் சொல்லி
எமக்குப் பக்க துணையாக இருந்தோர் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த நன்றிகள்.

மனைவி, மக்கள், குடும்பத்தவர்

39 Bradley Stone Road
Becton, London E6 5RH, UK.
Tel: 020-7473 1745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org